# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2022–ம் வருடம் மே மாதம் 20–ம் தேதி காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

1)பத்மனாபபுரம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாகனம் எண். 759748 வாகனத்தின் தகுதி சான்று புதுப்பித்துக் கொள்வதற்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ. 75,000/-க்கு நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று 29/03/2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1. | மாதவா மோட்டார்ஸ்<br>வெள்ளமடம் | 81100/- |
| 2. | அக்ஷயா மோட்டார்ஸ்<br>உண்ணாமலைக்கடை | 69800/- |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வ.எண். 1 யை விட வ.எண். 2ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த அக்ஷயா மோட்டார்ஸ் உண்ணாமலைக்கடை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு;– i)பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ii)செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.25**

அனுமதிக்கப்பட்டது.

2)இந்நகராட்சியில் தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய நகராட்சி பங்குத் தொகை 2021–2022–ம் ஆண்டிற்கு ரூ.30000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) செலுத்த மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:– மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.26**

அனுமதிக்கப்பட்டது.

3)தூய்மை இந்தியா திட்டம் 2022-2023-ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட மருந்துக் கோட்டை உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை முறையில் பிரித்து அப்புறப்படுத்திட நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் மானிய கோரிக்கை எண். 34/16-ன் படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சி மருந்துக் கோட்டை உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை முறைப்படி அப்புறப்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஏதுவாக அண்ணா பல்கலைகழகம், சென்னை அவர்களிடம் கோரப்பட்டது அண்ணா பல்கலைகழக அலுவலர்கள் Contour Survey செய்திட தற்போது வேலைப்பளு அதிகமாக உள்ள காரணத்தினால் நிறுவனத்தினரை செய்திட அணுகுமாறு தெரிவித்தார்கள். அதன்படி செய்து அதன் கன அளவை நிர்ணயம் செய்து தர கேட்டு Step , என்ற

நிறுவனதாரகளிடம் இவ்வலுவலக கடிதம் எண்.596/2022/இ1 நாள் 19/04/2022 வழியாக கோரப்பட்டது.

மேற்படி செய்துதரஅதற்கான கேட்பு தொகையினை செலுத்தும் பட்சத்தில் செய்துதரப்படும் எனவும் தெரிவித்ததன்படி கீழ்க்கண்டவாறு நிறுவனத்திருக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.

| Sl.No. | Description | Unit | Rate |
|---|---|---|---|
| 1. | Charges for | Yard Basic | 12500/- |
| | | DGST 18% | 2250/- |
| | | Tot al | 14750/- |

மேற்கண்டவாறு உள்ள தொகை ரூ.14750/-னை பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு, அவசர அவசியம் கருதி தொகை வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 596/2022/இ1)
அ.கு:-மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண்.27</u>**

அனுமதிக்கப்பட்டது.

4)இந்நகராட்சியில் 15th 2020-2021 -ன் கீழ் மேலாங்கோடு சாலை (மட்டையன் குளம் முதல் அரண்மனை சாலை, ஆசான்கிணறு சாலை வரை) தாச்சாலை அமைக்கும் பணிகள் ரூ.37.40 இலட்சத்தில் மேற்கொள்ள 11/03/2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

அதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் 4.90 சதவீதம் கூடுதலாக விலைப்புள்ளி வழங்கியதன்படி இந்நகர் மன்ற தீர்மானம் எண். 12, நாள் 29/03/2022-ன் படி விலைகுறைத்து தர கேட்டு ஒப்பந்ததாரர் திரு.ற்றி.ஜெயராஜ், முத்தலக்குறிச்சி, தக்கலை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அதன்படி மேற்கண்ட ஒப்பந்ததாரர் திரு.ற்றி.ஜெயராஜ் என்பவர் தற்போது பொருட்களின் விலை தார்விலை மற்றும் வேலையாட்களின் சம்பளம் அதிகரித்திருப்பதால் இதற்கு மேல் விலை குறைப்பு செய்ய இயலாது. ஆகவே இதனை ஏற்று வேலை செய்ய வேலை உத்திரவு வழங்கும்படி கடிதம் மூலம் தெரிவித்துள்ளார் (கடிதம் மன்றத்தின் பார்வைக்கு)

எனவே பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட 4.90%(+) க்கு கூடுதல் விலைவிகிதம் வழங்கியுள்ளதை ஏற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது
அ.கு:- திட்ட பணி என்பதால் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 1180/2021/இ1.)

**<u>மன்றத் தீர்மானம் எண்.28</u>**

மதிப்பீட்டு நிரக்கிலேயே மேற்படி பணி செய்ய மன்ற அனுமதி வழங்கப்படுகிறது.

5)இந்நகராட்சி அலுவலக பொது சுகாதாரம், பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவுகள் மூலமாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது ஏலம், தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வு போன்ற அடிப்படை பணிகளுக்கு உரிய அறிவிப்பு விளம்பரம் போன்றவற்றினை நாளிதழில் விளம்பரம் செய்வதற்குரிய வகைகளுக்கான செலவினத்திற்கு 2022- 2023-ஆம் ஆண்டிற்கு உத்தேச ரூ.5.00 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 21/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.29</u>**

அனுமதிக்கப்பட்டது.

6) இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN74W 0436 2004- ஆம் ஆண்டு வாங்கப்பட்டு சுமார் 18 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் அவ்வப்போது பழுது ஏற்பட்டு பழுதுபார்ப்பு செலவுகள் அதிகமாகி கொண்டிருக்கிறது.

மேலும் இந்நகராட்சியில் ஒரே ஒரு ஈப்பு வாகனம் மட்டும் உள்ளதாலும் ஆணையாளர் (ம) பொறியாளர் திட்டப் பணிகள், குடிநீர் விநியோகம் (ம) வெளிப்புறப் பணிகள் சம்மந்தமான ஆய்வுகள் மேற்கொள்ள அலுவலகத்திலிருந்து தலைமை நீரேற்று நிலையத்திற்கு செல்ல சுமார் 20 கி.மீ தூரமும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக ம் நாகர்கோவில் செல்ல சுமார் 20 கி. மீட்டர் தூரமும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் திருநெல்வேலிக்கு செல்ல 110 கி. மீ தூரமும் ஆய்வுக்காகவும் ஆய்வுக் கூட்டத்தில் கலந்துக் கொள்வதற்காகவும் செல்ல வேண்டியுள்ளது.

மேலும் தற்போது உள்ளாட்சி தேர்தல் முடிந்து நகர் மன்ற தலைவர் பதியேற்றுள்ளதால் மிகவும் இன்றியமையாமல் தேவைப்படுகிறது.

எனவே இந்நகராட்சிக்கு புதிய ஈப்பு வாகனம் அரசு இணையதள சந்தை விலை விகிதத்தில் (GEM RATE) புதிதாக SCORPIO S11 2WD 7STR BSVI ரூ. 15.50 இலட்சம் விலை விகிதத்தில் இரண்டு புதிய ஈப்பு வாகனம் பொது நிதியில் வாங்க நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதி வழுங்கம்.
2) நிதி நிலைமையை கருத்தில் கொண்டு தற்போது ஒரு வாகனம் வாங்கலாம்.
(ந.க.எண். 293/2019/இ1 )

**<u>மன்றத் தீர்மானம் எண்.30</u>**

அனுமதிக்கப்பட்டது.

7)இந்நகராட்சி அலுவலக உபயோக பயன்பாட்டிற்கு மரத்தினால் ஆன 15 எண்ணம் நாற்காலியும், ஆணையாளர் அறைக்கு 6 உயரம் கொண்ட 1 புதிய பீரோவும் (ம) பொது பிரிவிற்கு 4 அடி உயரம் கொண்ட 1 புதிய பீரோவும் வாங்குவதற்கு TANSI Furniture and Engineering works, என்ற நிறுவனத்தாரர் மூலம் வாங்க விலைப்புள்ளி விகிதம் () அனுப்புமாறு இவ்வலுவலக கடிதம் எண். 434/2022/இ1 -ன் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன்படி கீழ்க்கண்டவாறு நிறுவனத்தாரரிடமிருந்து விலைப்புள்ளி () வரப்பெற்றுள்ளது.

<u>Quotation Cum Proforma Invoice</u>

| Sl.No. | Product Code | Product Specification | Qty | Basic Price No Period Inclusive of Delivery charge (in Rs.) | Total Amount (in Rs) |
|---|---|---|---|---|---|
| 1. | TWCHR 006 | Teak wood assistant chair | 15 Nos | 3507/84 | 52618 |
| 2. | TSCUB 003 | Steel popular plain CUP board of size 72" x 33" x 19" | 1 Nos | 14069.16 | 14069 |
| 3. | TSCUB 005 | Steel Diner plain cup board size 50"x30"x17" | 1 Nos | 10332.16 | 10332 |
| | | Net Total | | | 77019.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | SGST @ 9% | 6931.71 |
| | | | | CGST@ 9% | 6931.71 |
| | | Grand Total | | | 90882.42 |

மேற்கண்டவாறு உள்ள தொகை ரூ. 90882/- னை , அவர்களுக்கு வழங்கவும்

செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:- அலுவலக அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 434/20222/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.31</u>**

அனுமதிக்கப்பட்டது.

8) கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-22-ன் கீழ் நவீன திரவ எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிக்கு உண்டான குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் ஏதேனும் ஒரு தமிழ் நாளிதழ் (ம) ஆங்கில நாளிதழில் 24/11/2021 அன்று பிரசுரம் செய்தமைக்கு கீழ்க்கண்டவாறு விளம்பர நிறுவனத்தாரரான Flame Adv , அவர்களிடமிருந்து விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேலும் நவீன திரவ எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிக்கு குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி 30/11/2021 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டதில் எவரும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்படாததால் மாநில அளவில் குறுகிய கால மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 03/12/2021 அன்று பிரசுரம் செய்தமைக்கும் கீழ்க்கண்டவாறு ., ., நிறுவனத்தாரரிடமிருந்து விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

A)Flame Advertising

| | |
|---|---|
| 1. Tamil Murasu Publication | 32450.00 |
| 2/ Business Standard Tamil Nadu | 1350.00 |
| | 33800.00 |
| CGST 2.5% | 845.00 |
| SGST 2.5% | 845.00 |
| Grand Total | 35490.00 |
| | |
| 1.Murasoli Tamil Nadu | 41250.00 |
| 2. The Times at India | 25050.00 |
| Total | 66300.00 |
| CGST | 1667.50 |
| SGST | 1667.50 |
| Grand Total | 69615.00 |

மேற்படி ‘A’ வில் உள்ள தொகை ரூ. 35490/- னை , என்ற நிறுவனதாரருக்கு வழங்கவும். மற்றும் ‘ வில் உள்ள தொகை ரூ. 69615.00 னை Mouls Advertising Private Limited, Chennai அவர்களுக்கு வழங்கவும் நகர் மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- அவசர அவசியம் கருதி தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1110/2021/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.32**

அனுமதிக்கப்பட்டது.

9)இந்நகராட்சியில் 15th 2020-2021 -ன் கீழ் ரூ.37.40 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாட்ட அளவில் பிரசுரம் செய்தமைக்கு நிரூபர் தினமலர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்டவாறு பில் பட்டியல் வரபெற்றுள்ளது.

| Sl.No. | Date of Insertion | Advertisement Name | Amount Rs. |
|---|---|---|---|
| 1. | 25-02-2022 | Dinamalar | 15,900.00 |
| | | CGST @ 2.5<br>SGST @ 2.5 | 795.00 |
| | | Total | 16,695.00 |

மேற்படி உள்ள தொகையினை தினமலர் நாளிதழுக்கு வழங்க நகர் மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- அவசர அவசியம் கருதி தொகை வழங்க மன்ற அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1181/2021/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.33**

அனுமதிக்கப்பட்டது.

10)இந்நகராட்சிக்குச் சொந்தமான குமாரகோவில் கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் அனுபவ உரிமை 2022- 2023-ம் ஆண்டுக்கு இவ்வாண்டு மூன்றாவது மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 22/04/2022ல் கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | பெயர் (ம) முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|
| 1, | திரு.ஜெபசிங்<br>கிறிஸ்துநகர்<br>மூலச்சல்<br>தக்கலை அஞ்சல் | 16,000/- |
| 2, | திரு. எட்வின் ஜெபசிங்<br>த/பெ. செல்லம்<br>கிறிஸ்துநகர்<br>மூலச்சல்<br>தக்கலை அஞ்சல் | 15,000/- |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் திரு. ஜெபசிங் என்பவர் ஒப்படைத்த ஒப்பந்தப்புள்ளி ரூ.16,000/- கூடுதலாக உள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.16,000/- 2020-2021-ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.16508/- ஐ விட ரூ.508/- குறைவாகவும் மூன்றிக்கு சராசரி தொகை ரூ.15,496/-ஐ விட ரூ.504/-கூடுதலாகவும் உள்ளது. எனவே கூடுதல் ஒப்பந்தப்புள்ளி வழங்கி உள்ள திரு. ஜெபசிங் என்பவருக்கு 01/05/2022 முதல் அனுபவ உரிமையை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:-1)வ.எண். 1ல் காணும் திரு.ஜெபசிங் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ. 16000/-க்கு அனுமதி வழங்கலாம்.
2)நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண். அ1/1250/2020)

**மன்றத் தீர்மானம் எண்.34**

அனுமதிக்கப்பட்டது.

11) இந்நகராட்சியில் தற்போது 3652 எண்ணம் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. புதிய வீட்டுக் குடிநீர் இணைப்பு வழங்கும் பணிக்கு 2022-2023 ஆம் ஆண்டுக்கு சாலை சீரமைப்புக் கட்டணம், மேற்பார்வைக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவைகளை கீழ்க்கண்ட விபரப்படி 5 சதவீதம் உயர்த்தி மதிப்பீடு தயார் செய்ய அரசாணை எண்.197, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12/07/2007 ன் படி கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

**WATER SUPPLY HOUSE SERVICE CONNECTION 2022-2023**

| S.No | Length | Road restoration | | | Domestic Deposit | Supervising charges | | | Domestic - Total amt |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2021-22 | 5% increase | 2022-23 | | 2021-22 | 5% increase | 2022-23 | 2022-23 |
| 1 | 2 | 3 | 4 | 5=3+4 | 6 | 7 | 8 | 9=7+8 | 10=5+6+9 |
| **CC ROAD** | | | | | | | | | |
| 1 | 0-15m | 8080 | 404 | **8484** | 5000 | 4302 | 215 | **4517** | **18001** |
| 2 | 0-30m | 15614 | 781 | **16395** | 5000 | 7098 | 355 | **7453** | **28848** |
| 3 | 0-45m | 23147 | 1157 | **24304** | 5000 | 10816 | 541 | **11357** | **40661** |
| 4 | 0-75m | 38214 | 1911 | **40125** | 5000 | 16682 | 834 | **17516** | **62641** |
| 5 | 0-90m | 45747 | 2287 | **48034** | 5000 | 19755 | 988 | **20743** | **73777** |
| **BT Road** | | | | | | | | | |
| 1 | 0-15m | 7848 | 392 | **8240** | 5000 | 4209 | 210 | **4419** | **17660** |
| 2 | 0-30m | 15148 | 757 | **15905** | 5000 | 6913 | 346 | **7259** | **28164** |
| 3 | 0-45m | 22449 | 1122 | **23571** | 5000 | 10537 | 527 | **11064** | **39635** |
| 4 | 0-75m | 37050 | 1853 | **38903** | 5000 | 16216 | 811 | **17027** | **60929** |
| 5 | 0-90m | 44351 | 2218 | **46569** | 5000 | 19196 | 960 | **20156** | **71724** |

| S.No | Length | Road restoration | | | NON-Domestic Deposit | Supervising charges | | | NON-Domestic - Total amt |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2021-22 | 5% increase | 2022-23 | | 2021-22 | 5% increase | 2022-23 | 2022-23 |
| 1 | 2 | 3 | 4 | 5=3+4 | 6 | 7 | 8 | 9=7+8 | 10=5+6+9 |
| **CC ROAD** | | | | | | | | | |
| 1 | 0-15m | 8080 | 404 | **8484** | 10000 | 4302 | 215 | **4517** | **23001** |
| 2 | 0-30m | 15614 | 781 | **16395** | 10000 | 7098 | 355 | **7453** | **33848** |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 0-45m | 23147 | 1157 | **24304** | 10000 | 10816 | 541 | **11357** | **45661** |
| 4 | 0-75m | 38214 | 1911 | **40125** | 10000 | 16682 | 834 | **17516** | **67641** |
| 5 | 0-90m | 45747 | 2287 | **48034** | 10000 | 19755 | 988 | **20743** | **78777** |
| | | | | | **BT Road** | | | | |
| 1 | 0-15m | 7848 | 392 | **8240** | 10000 | 4209 | 210 | **4419** | **22660** |
| 2 | 0-30m | 15148 | 757 | **15905** | 10000 | 6913 | 346 | **7259** | **33164** |
| 3 | 0-45m | 22449 | 1122 | **23571** | 10000 | 10537 | 527 | **11064** | **44635** |
| 4 | 0-75m | 37050 | 1853 | **38903** | 10000 | 16216 | 811 | **17027** | **65930** |
| 5 | 0-90m | 44351 | 2218 | **46569** | 10000 | 19196 | 960 | **20156** | **76724** |

மேற்கண்ட கட்டணம் 01/04/2022 முதல் 31/03/2023 வரை புதிய குடிநீர் இணைப்பு வழங்க அமல்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- வீட்டு உபயோகம் அல்லாத குடிநீர் இணைப்பிற்கு வைப்புத் தொகை ரூ. 10000/- செலுத்த மன்ற அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1926/2017/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.35</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

12)நகராட்சிப் பகுதிகளில் சுற்றித் திரியும் தெருநாய்களால் பொது மக்களுக்கு பெரிதும் அச்சுறுத்தலாகவே உள்ளதினைக் கருத்திற்கொண்டு அலைந்து திரியும் நாய்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் ஏறத்தாழ 170 எண்ணிக்கை இருப்பதாக கண்டறியப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கணக்கெடுக்கப்பட்ட நாய்களின் இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்திட கருத்தடை அறுவை சிகிட்டை செய்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 181 நாள் 05/04/2013-ன் படி நாய் ஒன்றுக்கு ரூ.700/- என்ற செலவினம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படியான 170 எண்ணிக்கை நாய்களை விலங்குகள் நல அமைப்புகள் மூலமாக பிடித்து கருத்தடை செய்யவும், அதற்குண்டான உத்தேச செலவு தொகை ரூ. 1,19,000/- (ஒரு இலட்சத்தி பத்தொன்பதாயிரம் மட்டும்) த்தினை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண்.36</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

13)தூய்மை இந்தியா திட்டம் பத்மனாபபுரம் நகராட்சி களப் பணியாளர்களை தனியார் வழி நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்ய ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்தமைக்கு இந்நகராட்சிக்கு பங்குத் தொகை ரூ.5486/- (ரூபாய் ஐந்தாயிரத்து நானூற்று எண்பத்தி ஆறு) மட்டும் கோவில்பட்டி நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அனுப்ப செலவுத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண்.37</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 8880/2022/பி2, நாள் 22/04/2022 ன் படி நமக்கு நாமேதிட்டம் 2022-2023-ன் கீழ் இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

| Sl.No. | Name of the ULB | Area In sq km | population | allocation (Rs in lakhs) 90% | 10% | Total | Minimum public control to collect |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Padmanabhapuram | 6.47 | 21342 | 10.39 | 1.03 | 11.42 | 3.81 |

மேற்கண்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அ.கு:- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 1343/2022/இ1)

**<u>நகர் மன்றத் தீர்மானம் எண். 38</u>**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

15)அரசாணை (நிலை) எண். 52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30/03/2022-ன் படி சொத்துவரி/காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள முதன்மை பதிவேடு தயார் செய்ய சுய மதிப்பீட்டு படிவம் இந்நகராட்சியில் விநியோகம் செய்வதற்கு கீழ்குறிப்பிட்டவாறு இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டது

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு படிவத்திற்கான தொகை & பைசா |
|---|---|---|
| 1, | தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வீஸ் லிட் திருச்சிராப்பள்ளி. | குடியிருப்பு/வணிகம்/சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிகாலிமனைவரி 2.95 பைசா |
| 2, | மேலகரம் பிரிண்டிங் ஒர்க்ஸ் கோ-சொசைட்டி லிட் தென்காசி. | குடியிருப்பு/வணிகம்/சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி காலிமனை வரி 2.50 பைசா |

மேலே பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண். 1யை விட வ.எண். 2ல் உள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி அளித்த மேலகரம் பிரிண்டிங் ஒர்க்கஸ் கோ---சொசைட்டி தென்காசி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அவசர அவசியம் கருதி சுயமதிப்பீட்டு படிவம் கூட்டுறவு அச்சகம் மூலம் விநியோக உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண்.39</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

16)இந்நகராட்சிக்குச் சொந்தமான மருந்துக் கோட்டை உரக்கிடங்கில் சேர்ந்துள்ள குப்பைகளை ( ) மூலம் அப்புறப்படுத்த நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் மான்ய கோக்கை எண். 34/16 ன் அறிவிப்பின் படி மருந்துக் கோட்டை உரக்கிடங்கு பகுதியில் செய்து முடிக்கப்பட்டது. மேற்படி இடத்தை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை செய்து தரும்படி , , அவர்களிடம் கோரப்பட்டது. அதன்படி மேற்கண்ட இடத்தினை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க தொகை ரூ. 150000 + 18% சேர்த்து ரூ.177000/-னை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பணியின் அவசர அவசியம் கருதி தொகை ரூ. 177000/-னை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.596/2022/இ1)

அ.கு;- அவசர அவசியம் கருதி தொகை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண்.40</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

17)நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 27519/37/2021/பி1, நாள் 31/03/2022 ன் படி நமக்கு நாமே திட்டம் 2021-2022 ன் கீழ் பணிகள் தேர்வு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| sl No | Name of work | Estimate Amount Proposed by the ULB in Lakhs | Approved Estimate Cost In lakhs | Government Grant in Lakhs | Public contribution in lakhs |
|---|---|---|---|---|---|
| 1. | Providing Paverblock, Daining shed, Supply and delivery of Steel bench, Desk, Computer, Priner and water prifier at Govt., middle school Thuckalay Govt., middle school Anganvadi Thuckalay, Govt., Primary school Kalkulam in Padmanabhapuram Municipality. | 8.00 | 8.00 | 5.33 | 2.67 |
| 2 | Providing Water Cooler Arrangements at Thuckalay Busstand in Padmanabhapuram Municipality. | 2.50 | 2.50 | 1.67 | 0.83 |
| 3 | Construction of Bus Shelter at Manali Junction near Kumar Hospital in Padmanabhapuram Municipality. | 3.00 | 3.00 | 2.00 | 1.00 |
| 4 | Improvements of existing | 4.50 | 4.50 | 3.00 | 1.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Children's park at Padmanabhapuram in Padmanabhapuram Municipality. | | | | |
| 5 | Supply and delivery of Street bench and Desk, Computer and urinal shed at Govt., Primary school Thuckalay near GH in Padmanabhapuram municipality | 3.00 | 3.00 | 2.00 | 1.00 |
| | **Total** | **21.00** | **21.00** | **14.00** | **7.00** |

மேற்படி தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கு பொது மக்கள் பங்களிப்பு தொகை மற்றும் அரசு மான்யம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மேலும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

**மன்றத் தீர்மானம் எண்.41**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

18)15 வது நிதிக்குழு மான்யம் 2021-2022-ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்கு தெருவிளக்குகள் கொள்முதல் செய்து கொள்ள () ரூ.67.50 இலட்சம் ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண். 31116/2022/அம்ரூத்-2,நாள் 29/03/2022-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அ.கு;- மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.42**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**19)**தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

**15–**ஆவது மத்திய நிதி ஆணையம், **2022–2023–**ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் **2.0** மற்றும் அம்ரூட் **2.0** ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.**73** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**19.07.2018** மற்றும் அரசாணை(நிலை) எண்.**76** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**26.07.2018** ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.**150** நகராட்சி நிர்வாகம் மற்றும்

குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building**) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|

| | |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி

வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்

மேலும் பத்மனாபபுரம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவையாக உள்ளது.

| வ.எண் | விபரம் | நகராட்சியால் செலுத்த வேண்டிய நிலுவை தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மின் வாரியத்திற்கு செலுத்தப்படவேண்டிய மின் கட்டணம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டியது குடிநீர் கட்டணம். | 80.92 |
| 2 | பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு செலுத்தப்படாமல் உள்ள சேமநல நிதி, பங்களிப்பு ஓய்வூதியம் தொகை (CPS), ஒய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஈட்டிய விடுப்பு தொகை மற்றும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை | 259.91 |
| 3 | தனியார் துாய்மை பணியாளர்களுக்கான ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய தொகை இந்நகராட்சியிலிருந்து கடன் நிறுவனத்தினருக்கு ( TNUDF) செலுத்தப்படவேண்டிய வட்டி தொகை பொது நிதியிலிருந்து ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படவேண்டிய தொகை | 151.19 |
| 4 | நில அளவை பணியாளருக்கான அரசுக்கு செலுத்த வேண்டிய நில அளவை செலவின மற்றும் பங்குத் தொகை | 47.95 |
| 5 | கூட்டுறவு அச்சகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை மற்றும் தெருவிளக்கு பொருட்கள் வாங்கியதற்கு வழங்க வேண்டிய தொகை | 13.00 |
| | மொத்தம் | **552.97** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும்

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், பத்மனாபபுரம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேற்படி அரசின் ஆணை மற்றும் வழி காட்டுதலின் அடிப்படையில் 01/04/2022 முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள அங்கீகரத்திற்காக பொருள் வைக்கப்பட்டதில் மன்றத் தீர்மானம் எண். 24, நாள் 11/04/2022–ன் படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மன்றத் தீர்மானத்தினை 13/04/2022 அன்றைய தினதந்தி மற்றும் தினகரன் நாளிதழ்களில் விளம்பரம் செய்து நகராட்சிக்குட்பட்ட வரிவிதிப்பாளர்களுக்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் நேரிலோ, தபால் மூலமாகவோ பத்மனாபபுரம் நகராட்சி ஆணையருக்கு அனுப்பலாம் என சொத்துவரி அறிக்கை வெளியிடப்பட்டது.

ஆனால் மேற்படி பொது சொத்துவரி/காலிமனை வரி சீராய்வு சம்மந்தமாக எந்தவித ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் வரப்படவில்லை. எனவே மன்ற தீர்மானம் எண். 24, நாள் 11/04/2022 னை உறுதி செய்து மேற்கண்ட விபரப்படியான 01/04/2022 முதல் பொது சொத்துவரி/காலிமனை வரி சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 551/2022/அ2)

<u>மன்றத் தீர்மானம் எண்.43</u>

மன்ற அனுமதி வழங்கப்பட்டது.